# மா.பீதாம்பரம் கவனிக்கப்படாத கவனிக்கப்படவேண்டிய ஈழத்து சிறுவர் நாடக முன்னோடி - ஓர் ஆய்வு

**வானதி பகிரதன்**

இன்று சிறுவர் நாடகம் எழுதுதல் என்பது முறையானதொரு ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் நாடகம் என்பது சிறுவர்களது வயது, அறிவு, அனுபவம், உளவியல், கற்பனையாற்றல் முதலானவற்றை கருத்தில் கொண்டு சிறுவர்களுக்காக எழுதப்படும் நாடகங்களைக் குறிப்பதாகும்.

ஈழத்து சிறுவர் இலக்கிய வரலாற்றில் சிறுவர் நாடகங்களுக்கென ஒரு வரலாறு உண்டு. ஆரம்பகால சிறுவர் நாடகங்கள் தற்கால சிறுவர் நாடகங்களிலிருந்து வேறுபட்டவையாக அமைந்துள்ளன. 1935ல் “வெளிவந்த பிள்ளைப்பாட்டு” என்ற சிறுவர் பாடல் தொகுதியில் சிறுவர் நாடக முன்னோடியாக கொள்ளப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ‘எலியும் சேவலும்’ என்ற சிறுவர் நாடகமும் மா.பீதாம்பரத்தின் ‘அனுராதபுரம் அமைத்த அருந்தவச் செல்வன் சித்ரா தேவியின் மகன் பந்துகாபயன் கதை’ என்ற தலைப்பிலான ஒரு சிறுவர் நாடகமும் இடம் பெறுகிறது.

ஈழத்து சிறுவர் இலக்கிய ஆய்வாளர்கள் பலரும் சோமசுந்தரப் புலவரையே சிறுவர் நாடக முன்னோடியாக இனங்கண்டு வந்துள்ளனர். ஈழத்து சிறுவர் நாடக முன்னோடியாகக் கொள்ளப்படும் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களும் சோமசுந்தரப் புலவரையே ஈழத்துச் சிறுவர் நாடக முன்னோடியாகக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. சோமசுந்தரப் புலவரின் காலத்தில் வாழ்ந்தவரான மா.பீதாம்பரத்தின் நாடகம் ஆய்வாளர்களது கவனத்திற்கு உட்படவில்லையென்றே கூற வேண்டும். இவரது இந் நாடகம் சிறுவர் நாடகத்திற்கான பண்புகளைக் கொண்டிருக்கின்ற இப் பிண்ணனியில் ஈழத்தின் சிறுவர் நாடக முன்னோடி யார்? என்பது மதிப்பீட்டிற்கு உள்ளாக வேண்டியுள்ளது.

இவ்வாய்வு மா.பீதாம்பரத்தின் இந் நாடகம் பற்றி அறிமுகம் செய்வதோடு அது எவ்வகையில் சிறுவர் நாடகத்திற்கான பண்புகளைக் கொண்டவையாக அமைந்துள்ளது என்பதையும் இந்நாடகம் கவனத்திற் கொள்ளப்படாமைக்கான காரணங்களையும் தெளிவுபடுத்துவதோடு சோமசுந்தரப் புலவரின் நாடகமும் மா.பீதாம்பரத்தின் நாடகமும் ஒப்பீட்டு ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு இதில் எது முந்தியது என்பதை காட்டுவதாகவும் இதன் மூலமாக பண்டைய சிறுவர் பற்றி ஆராய்கின்றவர்களுக்கு அது எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதை தெளிவுபடுத்துவதாகவும் அமைந்திருக்கும்.

**திறவுச் சொற்கள்:** சிறுவர் நாடகம், பீதாம்பரம், கற்பனையாற்றல்

*சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.*
*E-mail: pahi18@yahoo.com*